**செய்தி வெளியீடு:790** **23.9.08**

**மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் நியாயவிலைக் கடைகள், நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு ஆகியவற்றில் அதிரடி ஆய்வு நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் தற்காலிக பணி நீக்கம்**

மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் பொது விநியோகத் திட்ட ஆய்வுக் கூட்டத்தை இன்று மதியம் 03.00 மணியளவில் தொடங்குவதற்கு முன்னதாக காலை 09.00 மணிக்கே புறப்பட்டு கூடலூர் வட்டத்திலுள்ள ஒவ்வொரு நியாயவிலைக் கடைக்கும் நேரடியாக சென்று ஆய்வு செய்தார்கள். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு கதர் வாரியத் துறை அமைச்சர் திரு. க. ராமச்சந்திரன் அவர்களும் உடன் சென்றார்கள். நீலகிரி கூட்டுறவு நிறுவனத்தால் நடத்தப்படும் நடுவட்டம் கூட்டுறவு நியாயவிலைக் கடை, பொது பணியாளர்கள் கூட்டுறவு பண்டகசாலை நடத்தும் கூடலூர் பஜார் நியாய விலைக்கடை, நீலகிரி மாவட்ட வட்டுறவு பண்டகசாலை நடத்தும் சுங்கம் நியாய விலைக்கடை மற்றும் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் ஒன்றினையும், மகளிர் சுய உதவிக்குழுக்கள் நடத்தும் மூன்று நியாயவிலைக் கடைகளையும் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு ஒன்றையும் நேரடியாக ஆய்வு செய்தார்கள். ஆய்வின்போது காணப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக விற்பனையாளர் மனோகரன் மற்றும் காளிமுத்து ஆகிய இருவரையும் தற்காலிகப் பணி நீக்கம் செய்ய ஆணையிட்டார்கள். சுங்கம் நியாயவிலைக் கடையை 100 விழுக்காடு ஆய்வுக்கு உட்படுத்த மண்டல இணைப்பதிவாளருக்கு ஆணையிட்டார்கள். மேலும், போலிப்பட்டியல், இருப்பு குறைவு போன்ற குறைபாடுகளை ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து அதற்கான தொகையை வசூல் செய்ய ஆணையிட்டார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கில் ஆய்வு மேற்கொள்ளும் போது ஆங்காங்கே ஒட்டடை தொங்கி, சுகாதாரமற்ற நிலையில் இருந்ததை சுட்டிக் காண்பித்து இனிமேல் சுத்தமாக வைக்க ஆணையிட்டார்கள். ஒவ்வொரு கடைக்கும் ஆய்வுக்கு செல்லும்போதும், அங்கு வந்த குடும்ப அட்டைதாரர்களிடம் நேரடியாக விசாரணை மேற்கொண்டு தரமான பொருட்கள் அளவு குறைவின்றி உரிய அளவுடன் வழங்கப்படுகிறதா என்பதையும் விசாரித்து அறிந்தார்கள். பொது மக்கள் தெரிவித்த குறைகளை உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவும் ஆணையிட்டார்கள்.

கூடலூர் வட்டத்தில் ஆய்வு பணியை முடித்தபின் அரசு விருந்தினர் மாளிகையில் உள்ள கூட்ட அரங்கில் நீலகிரி, கோவை, ஈரோடு மாவட்டங்களுக்கென பொது விநியோகத் திட்டத்தின் செயலாக்கத்தினை ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு கதர் வாரியத் துறை அமைச்சர் திரு. க. ராமச்சந்திரன் அவர்களும் உடனிருந்தார்கள்.

ஆய்வுக் கூட்டத்தை துவக்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் புதிய குடும்ப அட்டை கோரி பெறப்படும் விண்ணப்பங்களை 60 நாட்களுக்குள்

தீர்வு செய்ய வேண்டும். விண்ணப்பங்களை பெறும்போது குறைபாடுகள் இருப்பின் அதனை சரி செய்து வழங்கப்பட வேண்டும். எரிவாயு முகவர்களின் அலுவலகங்களில் எரிவாயு இணைப்பைப் பெற குடும்ப அட்டைகளை வலியுறுத்தப்பட மாட்டாது என்று விளம்பரப் பலகையில் எழுதி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குடும்ப அட்டைகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் கணினி பதிவுகளிலும் மேற்கொள்ள வேண்டும், மாவட்ட வழங்கல் அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் உட்பட வருவாய் துறை அலுவலர்கள் ரோந்து பணிக்கு செல்ல வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் உணவகங்களில் ஆய்வு செய்து அரசு நிர்ணயித்துள்ள விலையில் சாப்பாடு மற்றும் சிற்றுண்டிகள் விற்கப்படுகிறதா என்பதை கண்காணித்து வட்ட வழங்கல் அலுவலர்கள் மாவட்ட வழங்கல் அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும், அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீட்டு ஆணை உரிய தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். மக்கள் குறைதீர்க்கும் கூட்டங்களில் பெறப்படும் மனுக்களும், கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் புகார்களும் உடனுக்குடன் தீர்வு செய்யப்பட வேண்டும். இருப்பு அதிகமாக உள்ள நியாயவிலைக் கடைகளில் உள்ள பொருட்கள் தேவையுள்ள கடைகளுக்கு உடனுக்குடன் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

மண்டல இணைப்பதிவாளர்கள் பொருட்களின் தரத்தை சோதிக்க வேண்டும். மேலும் நகர்வு வழித்தடம் **(Route Chart)** எழுதப்பட்டுள்ளதா என்பதையும், பொது விநியோகத் திட்ட பொருட்களை நகர்வு செய்யும் லாரியில் புகார் பதிவேடு முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பதையும் கண்காணிக்க வேண்டும். பகுதி நேரக் கடைகள் கோரிய மனுக்களை உடனுக்குடனி தீர்வு செய்ய வேண்டும். கிடங்குகளிலிருந்து அத்தியாயவசியப் பொருட்களை எடுத்துச் செல்ல முதன்மைச் சங்கப் பணியாளர்கள் மட்டும் தவறாமல் அனுப்பப்பட வேண்டும். பகுதிநேரக் கடைகள் எந்த நேரத்தில் திறக்கப்பட்டிருக்கும் என்பதை விளம்பரப் பலகையில் எழுதப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்க வேண்டும். மண்டல மேலாளர்கள் கிடங்குகளிலிருந்து அனுப்பப்படும் பொது விநியோகப் பொருட்கள் தான் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். மண்ணெண்ணெய் பயன்படுத்தி இயக்கப்படும் லாரிகள் பேருந்து போன்றவற்றை கைப்பற்றி வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் ஆணையிட்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாவட்ட ஆட்சியர் திரு. ஆனந்தராவ் விஷ்ணு பாட்டில், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர் திரு.சித்திரசேனன், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**